1994 ஏப்ரல் 4]

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வந்தவுடன் தமிழகத்தை நல்ல ஆட்சி செய்து வருகிற இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு இன்றைக்கு அந்த மேகல சின்னம் கிராமத்திலே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிக்குப் பெண்கள் விடுதி ஒன்று திறக்கப்பட்டுள்ளது. ஆகவே, தர்மபுரி மாவட்டம் மக்கள், குறிப்பாக கிருஷ்ணகிரி தொகுதி மக்கள் சார்பாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். மேலும், பெண்கள் படிக்க வேண்டும்; பெண்கள் சமுதாயத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக பல நல்ல திட்டங்களைத் தீட்டி வருகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே அந்த விடுதிக்கு ஒரு சொந்தக் கட்டிடத்தை இவ்வாண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் தருவார்களா என்பதையும் கேட்டுக்கொண்டு மேலும் அந்த விடுதியில் உள்ள மாணவியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அந்த எண்ணிக்கையை உயர்த்தித் தருவாரா எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, *1993-94* ஆம் ஆண்டு மாணவ மாணவியர் விடுதிகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்காக இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அந்த மூன்று கோடி ரூபாயில் ஏழு ஆண்கள் விடுதியும், ஆறு பெண்கள் விடுதியும் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன. வருகிற ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற மேகல சின்னம் மாணவியர் விடுதி, நிதி நிலைக்கேற்ப தேவையின் முக்கியத்துவத்தைக் கருதி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *180*, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

180--

பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலில் பக்தர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தல்

***20621-திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில் வளாகத்திற்குள், பக்தர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பக்தர்களின் வசதிக்காக திருக்கோயிலில் மண்டபங்கள் கட்டுவதற்கும், தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய நீர்த் தேக்கத் தொட்டிகளை அமைக்கவும், பக்தர்கள் முடி காணிக்கை செலுத்த அறைகள் கட்டவும், பக்தர்களுக்குத் தேவையான குளியலறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டவும், ரூ. 71.60 லட்சம் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக் கொண்டால் இன்றைக்குத் தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒருவர்தான் மத நல்லினக்கத்தைச் சிறப்புறக் கட்டிக் காத்து வருவதோடு மட்டுமல்லாமல், திருக்கோயில்கள் சிறக்க, திருக்கோயில்கள் நல வாரியம் அமைத்து பல்வேறு காரியங்களைச் செய்து வருகிறார்கள். பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலில் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காக 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்த அந்த நல்ல செய்திக்கு என்னுடைய நன்றியை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் தெரிவிப்பதோடு, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து இந்த வேலையானது எவ்வளவு கால கட்டத்திற்குள் செய்து முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: பேரவைத் தலைவரவர்களே, ஆறு மாத காலத்திற்குள் இந்த வேலைகள் செய்து முடிக்கப்படும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரா. சக்குபாய்.

திருமதி ரா. சக்குபாய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காகப் பாலம் கட்ட ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கியும், கோயில் திருப்பணிக்கு மேலும் 71 இலட்சம் ரூபாய் வழங்கியும் உள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். மேலும் இப்பணிகள் எப்பொழுது முடிவடையும் என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11-15*

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக, உங்கள் மூலமாக, ஆறு மாதத்திற்குள் முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அதையே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

169–

வரகூர் தொகுதியில் திருமாந்துறைக்கும் கீரனூருக்கும் இடையே பாலம் கட்டுதல்

***19992--திரு ஏ.தா. பொன்னுவேலு:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம் சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் திருமாந்துறைக்கும்- கீரனுருக்கும் இடையே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் பாலம் கட்டும் பணியை மேற்கொள்ள சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது. என்பதைக் குறிக்கும்.]